# காலிங்கராயன் சிலை, மணிமண்டபம் திறப்பு

## முதல்வர் இபிஎஸ் திறந்து வைத்தார்

ஈரோடு,மே 14-

பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் பொதுப்பணித்துறை சார்பில் அமைக்கப்பட்டு உள்ள காலிங்கராயன் சிலை மற்றும் மணிமண்டபத்தை முதல்வர் எடப்பாடி பழனி சாமி திறந்து வைத்தார்.

ஈரோடு, கரூர் மாவட்ட மக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்யும் பவானி சாகர் அணையில் இருந்து வரும் நீர், பவானி காலிங்கராயன்பாளையத் தில் அணை கட்டி தேக்கி வைக்கப்படுகிறது. அங் கிருந்து கால்வாய் மூலம் பயணிக்கும் பாசன நீர், கொடுமுடி ஆவுடையார் பாறை வரை 56 மைல்

காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் மூலமாக 15 ஆயி ரத்து 734 ஏக்கர் பாசனம் பெறுகிறது.

பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள காலிங்கராயன் அணைக் கட்டு கி.பி. 13 மற்றும் 14ம் நூற்றாண்டை சேர்ந்ததா கும். நதிகள் இணைப் பிற்கு முன்னோடியாக அமைந்துள்ள இந்த கால் வாயை கடும் சிரமத்திற் கிடையே வெட்டிய காலிங்கராயன், தானோ,

தனது சந்ததியினரோ இதி லிருந்து நீர் எடுத்து பயன் படுத்த மாட்டோம் என்ற உறுதி கொடுத்த புகழுடை யவராவர்.

அவரது நினைவை போற்றும் வகையில் காலிங்கராயன் அணைக் கட்டு பகுதியை சுற்றுலா தளமாக அறிவித்த முன் னாள் முதல்வர் ஜெய லலிதா, அங்கு காலிங்க ராயனுக்கு சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்க

இன்று
2
தினமலர்
கேட்டு
வாங்குங்கள்



பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் நதிகள் இணைப்பின் முன்னோடி காலிங்கராயன் சிலையை முதல்வர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.